36. ஒரு செல் பாசிக்கு எடுத்துக்காட்டு

(1) ஈஸ்ட் (2) கிளாமிடோமானஸ்

(3) காரா (4) பாரமீசியம்

37. மண்புழு எத்தொகுதியைச் சார்ந்தது?

(1) ஆர்த்ரோபோடா (2) மொலஸ்கா

(3) பிளாட்டி ஹெல்மின்தஸ் (4) அன்னலிடா

38. கொசு எந்தத் தொகுதியைச் சார்ந்தது?

(1) பறவை (2) பாலூட்டி (3) கணுக்காலி (4) மெல்லுடலி

39. நவீன வகைப்பாட்டியலின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

(1) கரோலஸ் லின்னேயஸ் (2) காஸ்பார்டு பாஹின்

(3) அரிஸ்டாட்டில் (4) விட்டேக்கர்

40. உயிருள்ள மற்றும் உயிரற்றவைகளின் பண்புகளைப் பெற்றவை _____.

(1) புரோட்டோசோவா (2) வைரஸ்

(3) பாக்டீரியா (4) பூஞ்சை

41. நீர் மற்றும் நிலத்தில் வாழும் குளிர் இரத்தப் பிராணிக்கு எடுத்துக்காட்டு

(1) ஆமை (2) சாலமண்டர் (3) பாம்பு (4) எலி

42. சிசிலியன் என்ற விலங்கு ஒரு / ஓர் _____.

(1) பாலூட்டி (2) இருவாழ்வி (3) பறவை (4) மீன்

43. பிளாட்டிபஸ் என்பது ஒரு / ஓர் _____.

(1) பாலூட்டி (2) பறவை (3) ஊர்வன (4) தாவரம்

44. லியூகோசெலினியா என்பது _____.

(1) புரோட்டோசோவா (2) துளையுடலி (3) குழியுடலி (4) மெல்லுடலி

45. கல்லீரல் புழு என்பது _____.

(1) வளைதசைப் புழு (2) தட்டைப் புழு (3) உருளைப் புழு (4) முட்தோலி

46. கணவாய் மீன் எனப்படுவது _____

(1) ஒரு மீன் (2) ஓர் இருவாழ்வி (3) ஒரு மெல்லுடலி (4) ஒரு முட்தோலி

LIVEWORKSHEETS

47. நட்சத்திர மீன்

(1) ஒரு மீன் (2) ஓர் இருவாழ்வி (3) ஒரு மெல்லுடலி (4) ஒரு முட்தோலி

48. சைகஸ் மற்றும் பைனஸ் _____ க்கு எடுத்துக்காட்டு

(1) ஜிம்னோஸ்பெர்ம் (2) ஆஞ்சியோஸ்பெர்ம்

(3) ஒரு வித்திலை தாவரம் (4) இரு வித்திலை தாவரம்

49. நீலப் பச்சைப்பாசி _____ க்கு எடுத்துக்காட்டு.

(1) மொனிரா (2) புரோட்டிஸ்டா (3) ஒரு பூஞ்சை (4) இரு வாழ்வி

50. *மாஞ்சிபெரா இண்டிகா* என்பது எதன் அறிவியல் பெயர் _____

(1) புளி (2) மா (3) அல்லி (4) வெங்காயம்

51. பெரும்பாலான பூஞ்சைகளின் செல் சுவரில் காணக்கூடிய முக்கியமானதொரு பகுதிப்பொருள்?

(1) கைட்டின் (2) பெப்டிடோகிளைக்கான்

(3) செல்லுலோஸ் (4) ஹெமிசெல்லுலோஸ்

52. R.H. விட்டேக்கர் என்பவரால் முன்மொழியப்பட்ட ஐந்து உலக வகைப்பாடு இதன் அடிப்படையில் அமையவில்லை?

(1) இனப்பெருக்க முறை

(2) உணவூட்ட முறை

(3) நன்கு வரையறுக்கப்பட்ட உட்கரு கொண்டது அல்லது அற்றது

(4) சிக்கலான உடல் அமைப்பு

53. இரு சொல் பெயரிடும் முறையை பயன்படுத்தியவர் _____ .

(1) கரோலஸ் லின்னேயஸ் (2) அரிஸ்டாட்டில்

(3) ஹிப்போகிரெட்டஸ் (4) காஸ்பார்டு பாஹின்

54. கீழ்க்கண்டவற்றுள் மிகச் சிறிய டாக்ஸான்?

(1) வகுப்பு (2) வரிசை (3) சிற்றினம் (4) பேரினம்

55. இரு சொல் பெயரிடும் முறையில், உள்ள இரு பெயர்களின் பகுதிகள்?

(1) குடும்பம் மற்றும் பேரினம் (2) வரிசை மற்றும் குடும்பம்

(3) பேரினம் மற்றும் வகை (4) பேரினம் மற்றும் சிற்றினம்

56. டாக்ஸான் என்பது எதைக் குறிக்கின்றது?

(1) சிற்றினம் (2) வகைப்பாட்டின் அலகு

(3) வகைப்பாட்டின் உயர்ந்த நிலை (4) நெருக்கமான உறவு கொண்ட குழு

LIVEWORKSHEETS

57. வகைப்பாட்டின் மிகச்சிறிய அலகு யாது?

(1) வகுப்பு (2) வகுப்பு துணை (3) சிற்றினம் (4) பேரினம்

58. வகைப்பாட்டியல் (Taxonomy) என்னும் சொல்லை உருவாக்கியவர் யார்?

(1) கன்டோல் (2) வாக்ஸ்மேன் (3) லூவென்ஹாக் (4) லூயிஸ் பாஸ்டர்

59. உயிரின வகைப்பாட்டின் அடிப்படை அலகு?

(1) வகுப்பு (2) சிற்றினம் (3) குடும்பம் (4) இனத்தொகுதி

60. வகைப்பாட்டியலின் முதல்படி எது?

(1) பெயரிடுதல் (2) வகைப்பாடு

(3) அடையாளம் காணல் (4) படிநிலை வரிசையமைப்பு

61. கீழ்க்கண்டவற்றில் எது சரியான படிநிலை?

(1) உலகம், பிரிவு, தொகுதி, பேரினம் மற்றும்

(2) தொகுதி, பிரிவு, பேரினம் மற்றும் வகுப்பு

(3) உலகம், பேரினம், வகுப்பு, தொகுதி மற்றும் பிரிவு நிலை

(4) தொகுதி, உலகம், பேரினம், சிற்றினம் மற்றும் வகுப்பு

62. டாக்ஸானில் அடங்கியுள்ளது?

(1) பேரினம் மற்றும் சிற்றினம் (2) உலகம் மற்றும் பிரிவு

(3) படிநிலையில் உள்ள அனைத்தும் (4) மேற்கண்ட எதுவுமில்லை

63. கீழ்க்கண்ட டாக்ஸானில் அதிக உயிர்களை உள்ளடக்கியது?

(1) வரிசை (2) சிற்றினம் (3) பேரினம் (4) தொகுதி

64. வகைப்பாட்டியல் அலகாக இல்லாதது எது?

(1) வரிசை (2) குடும்பம் (3) குளுமசீயே (4) தொகுதி

65. பாக்டீரியாக்களின் செல்சுவர் உருவாக்குதலை தடுக்கக்கூடிய உயிர்எதிர்ப்பி?

(1) பென்சிலின் (2) ரியாம்பிசின் (3) ஸ்ரெப்டோமைசின் (4) ஆந்தராசைக்ளின்

66. "ஸ்பீஸிஸ் பிளாண்டாரம்" என்ற நூலை எழுதியவர்?

(1) காஸ்பார்டு பாஹின் (2) அரிஸ்டாட்டில்

(3) கரோலஸ் லின்னேயஸ் (4) தியோப்ராஸ்டஸ்

67. இருசொல் பெயரிட்டு முறையில் முதல் பெயராக வருவது?

(1) பேரினப்பெயர் (2) சிற்றினப் பெயர் (3) 1 மற்றும் 2 (4) இவற்றில் எதுவுமில்லை

LIVEWORKSHEETS

68. இருசொல் பெயர்கள் உள்ள மொழி?

(1) ஆங்கிலம் (2) ஸ்வீடிஸ்

(3) இலத்தீன் (4) இவற்றில் எதுவுமில்லை

69. நான்கு அறைகளை கொண்ட இதயம் இருப்பது?

(1) தவளை (2) முதலை (3) ஓணான் (4) சுறா

70. எலும்பு மஜ்ஜை இதில் இல்லை?

(1) ஊர்வன (2) இருவாழ்விகள் (3) பறவைகள் (4) மீன்கள்

LIVEWORKSHEETS